# எம்.ஜி.ஆர். அமெரிக்கா புறப்பாடு; நெடுஞ்செழியன் பொதுச்செயலாளர்


★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 15 ஜுல்ஹஜ்: 29 இதழ்: 251
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-11-78



யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்பிரமணியன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

RECEIVED 1-11-78 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA LIBRARY


(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று மாலை தமது வெளிநாடுகளுக்கான சுற்றுவிஜயத்தை ஆரம்பித்தார். வெளிநாடுகளில் தமிழக முதல்வர் ஐந்து வாரம்வரை தங்கியிருப்பார்.

நாடு திரும்பும்வரை, அ. இ. அ. தி. மு. கழகத்தின் தற்காலிக பொதுச்செயலாளராக திரு. வி. ஆர். நெடுஞ்செழியனை திரு. ராமச்சந்திரன் நேற்று நியமித்தார்.

சென்னையைவிட்டுப் புறப்படுமுன்னர், பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; முதலில் தாம் பிரிட்டன் செல்வதாகவும், அங்கிருந்து ஐந்தாம் திகதி அமெரிக்கா புறப்படுவதாகவும் திரும்பும் வழியில் ஜப்பான், சிங்கப்பூருக்கும் விஜயம் செய்வதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவில்; நிர்வாகம், பொலிஸ், நீதித்துறைகள் பற்றியும் சிறுகைத்தொழில் வளர்ச்சிபற்றி தாம் விரிவாக ஆராய்ந்தறியப் போவதாகவும், தொழிலதிபர்களைச் சந்திக்கப்போவதாகவும், கடல் நீரிலிருந்து மின்சாரம் பெறுவது குறித்தும் ஆலோசனை நடத்தப்போவதாகவும் முதலமைச்சர் ராமச்சந்திரன் விளக்கினர்.

நேற்றுப் பிற்பகல் அ இ அ தி மு கழகத்தின் சட்ட மன்றக் கூட்டத்தைக் கூட்டிய தமிழக முதல்வர் திரு. வி. ஆர் நெடுஞ்செழியனை தற்காலிக பொதுச் செயலாளராக நியமித்தார். தாம் நாடு திரும்பியதும், பொதுச்செயலாளர் மற்றும் முக்கிய பதவிகளுக்கான தெரிவு நடைபெறுமென்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்

அ இ அ தி மு கழகம் 1972ல் அமைக்கப்பட்டது. அன்றுமுதல் திரு எம் ஜி ராமச்சந்திரனே பொதுச் செயலாளராக இருந்தார். ...

# தொலைபேசிக் கட்டணம் இன்றுமுதல் அதிகரிப்பு!

(கொழும்பு)

தொலைபேசி அழைப்புகளுக்கான புதிய கட்டணம் இன்று முதல் அமுலுக்கு வருகின்றது

புதிய அறிவிப்புக்கிணங்க சகல தொலைபேசிக்கட்டணங்களும் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அறிவிக்கப்பட்ட புதிய தொலைபேசிக் கட்டணங்களின்படி, சாதாரண நேரடி அழைப்புகளுக்கான கட்டணம் 25 சதத்திலிருந்து 30 சதமாக அதிகரிக்கப்படுகிறது.

தொலைபேசி மூலம் அனுப்பப்படும் தந்திகளுக்கான கட்டணம், [வார்த்தைகளுக்கிணங்க] 50 சதமாக அதிகரிக்கப்படுகின்றது. தூர இடங்களுக்கான தொலைபேசிக் கட்டணம் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்படுகின்றது

அழைப்பின்பேரில் பெறப்படும் நேரடித் தொடர்பு மூலமான [நாட்டின் சில பகுதிகளில்] தொலைபேசிக் கட்டணம், 50 சதத்திலிருந்து ஒரு ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கு புதுடில்லியில் அன்பான வழியனுப்பு

புதுடில்லி, அக். 31

ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன புதுடில்லியிலிருந்து இன்று சிராவஸ்திக்கு புறப்பட்டபோது புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டி பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் உட்பட அமைச்சர்கள் பிரமுகர்கள் திரு. ஜெயவர்த்தனவை வழியனுப்பி வைத்தனர்.

திரு. ஜெயவர்த்தனவுக்கு ஆயுதப்படை அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது

திரு. ஜெயவர்த்தன முதலில் சிராவஸ்திக்கும் பின்னர் கபிலவஸ்துக்கும் விஜயம் செய்து புனித ஸ்தலங்களைத் தரிசித்தார். (இ)

# மூதூரில் 90 கூட்டணிக் கிளைகள் இயங்கவில்லையாம்

(மூதூர்)

மூதூர்த்தொகுதியில் வாழும் தமிழர்களை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடம் ஒதுக்கிவிட்டதா? என்ற கேள்வியை சாலையூர் கூட்டணிக் கிளைத் தலைவர் திரு. க. விஸ்வநாதர் சுந்தையா நடராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் எழுப்பியுள்ளார்.

மூதூர்த்தொகுதியில் கூட்டணி எம் பி தெரிவுசெய்யப்படாத ஒரே ஒரு காரணத்திற்காக இங்குவாழும் தமிழர்களை கூட்டணியினர் புறககணிப்பது முறையாகுமா? என்றும் கேட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"எங்கள் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் 70ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியடைந்த பின் வட்டுக்கோட்டைத் தொகுதி ஒதுக்கப்படவில்லை. 70 முதல் 77ம் ஆண்டுவரை கூட்டணியினர் வட்டுக்கோட்டைத் தொகுதியிலும் அக்கறை காட்டிவந்தனர். கூட்டணியின் முக்கிய மாநாடு அத்தொகுதியிலேயே நடைபெற்றது. கூட்டணியின் முக்கிய தீர்மானம் அத்தொகுதியிலேயே நிறைவேற்றப்பட்டது. திரு. அமிர்தலிங்கம் தோல்வியடைந்துவிட்டார் என்பதற்காக கூட்டணித் தலைமைப்பீடம் வட்டுக்கோட்டைத்தொகுதியை ஒதுக்கி வைக்கவில்லையே. அப்படியானால் எங்களுக்கு மட்டும் ஏன் இந்தநிலை?

சாலையூர், சம்பூர், கொக்கட்டி, சம்புக்களி, இலாக்கந்தை, கூனித்தீவு வாழ் தமிழர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுவருகிறார்கள். இதனைக் கூட்டணித் தலைமைப் பீடம் கவனத்திற்குஎடுக்கவேண்டும்.

## 2 ஆண்டுகளில் ரூ. 60 கோடி குவிந்தது!

[கொழும்பு]

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர் மூலம் நாட்டுக்குப் பெருமளவு பணம் குவிந்துகொண்டிருப்பதாகத் திட்டமிடல் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 60கோடி ரூபாவை இலங்கையர் தமது தாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிபவர்கள் ஆவர்.

## நாளை முதல் கடுகதிசேவை

[முல்லைத்தீவு]

யாழ்ப்பாணத்திற்கும் முல்லைத்தீவுக்குமிடையில் புதிய கடுகதி சேவையொன்று நாளை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இலங்கை-இந்திய பொருளாதார ஒத்துழைப்பு:

## அமைச்சர்கள் மட்டத்தில் விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை-இந்திய பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து அமைச்சர்கள் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் டிசம்பரில் நடைபெற உள்ளன.

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவின் இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாகவே அமைச்சர்கள் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி டிசம்பர் முதல் வாரத்தில் இந்தியா செல்வார்

இலங்கை-இந்திய வர்த்தக விஸ்தரிப்பு இலங்கையில் கூட்டுத் திட்டங்களில் இந்திய மூலதான அதிகரிப்பு ஆகியவை தொடர்பாகவே இந்த அமைச்சர்கள் ரீதியிலான மகாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்தப்படும். (இ)

## சமூக சேவைகள் அமைச்சர் நாளை வருகிறார்

[யாழ்ப்பாணம்]

சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்ன நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

ஒரு நாள் விஜயம் மேற்கொண்டுவரும் அமைச்சர், கைதடி முதியோர் இல்லக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைப்பதுடன் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

## புதிய அதிகாரிகள்

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு புதிய அதிகாரிகள் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்கள்.

டிப்போ முகாமையாளராக திரு. இ. பர்ணகுலசிங்கமும் பொறியியலாளராக திரு எஸ். உதயகுமாரும் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்கள்.

முன்பு சாலை முகாமையாளராகப்பணிபுரிந்த திரு. பி. யூ. மகாலிங்கம் வடபிராந்திய திமர் பரிசோதனைக் குழுவிற்கு நியமனம் பெற்றுள்ளார். பொறியியலாளராக முன்பு கடமையாற்றிய திரு. எஸ். பாலேந்திரா வவனியாப்பகுதி பிரதம பொறியியலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார் (உ)

ஒற்றைவழிப் பாதையில்

## சைக்கிளில்சென்ற 27 இளைஞர்கள் கைது

### யாழ். நீதிமன்றத்தில் இன்று ஆஜராகுவர்

(யாழ்ப்பாணம்)

வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மீறி ஒற்றைவழிப் பாதையில் சைக்கிளில் சென்ற 27 இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டு, இன்று காலை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிசாரினால பணிக்கப்பட்டார்கள்.

யாழ். நீதிமன்றத்தில், நீதவான் திரு. டபிள்யூ. எம். வீரத்ன முன்னிலையில் இன்று இவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

யாழ். பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா இவர்களைக் கைது செய்தார். 27 சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இ. போ. ச., பஸ்களில் மிதிபலகைகளில் செல்வோரும் கைது செய்யப்படுவார்கள் என்றும் இன்ஸ்பெக்டர் சேனாதிராசா கூறினார்.

பஸ்களில் மிதிபலகைகளில் சென்ற 7 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் கண்டக்டருக்கு 100 ரூபாவும் பிரயாணிகளுக்கு தலா 25 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (நாயன். நி. க.)

## இன்று வெளிவரும்

[கொழும்பு]

ஜி. சி. ஈ. [சாதாரண தர] பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த பரீட்சையில் 2 லட்சத்து 30 ஆயிரம் பேர் தோற்றினார்கள்.

### பொருளாதாரப் பிரச்னை தீர்வதற்கு

# தொழிலாளர் பிரச்னைகள்

## தீர்த்துவைக்கப்பட வேண்டும்

### — யாழ். எம். பி.

(யாழ்ப்பாணம்)

'தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பட்டால்தான் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். தொழிலாளர்களுக்கு பிரச்னைகள்ஏற்படும்.பொழுது தொழிலாளர்களும், அரசியல் கட்சிகளும் அப்பிரச்சினைகளை பொதுப் பிரச்சினையாகக் கருதி தீர்வுகாண முன்வரல் வேண்டும்.'

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத் தேசிய பொதுச்சேவை சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் வடபிரதேச அலேவி சங்வர்த்தன ஜாதிக பொது சங்கமய தலைவர் திரு. ஜி டி. சந்திரதாஸ இதனைத் திறந்துவைத்தார்.

யாழ். மத்திய விற்பனைத் திணைக்களத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

யாழ் எம். பி. தொடர்ந்து பேசுகையில் இங்குள்ள சிங்களத் தொழிலாளர் பிரதிநிதிகள் தென்னிலங்கைக்குச் சென்று தமிழ் மக்களின் உண்மை நிலையை விளக்க வேண்டும். தமிழ் மக்கள்மீது சிங்களச் சகோதரர்கள் நம்பிக்கை வைக்கும் வண்ணம் தொழிற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்

தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் எந்நோக்கத்திற்காக ஆட்சிமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோமோ அந்நோக்கம் தவறுமானல் பதவிகளைத் துறந்து வெளியேற வேண்டியவர்களாக உள்ளோம்' என்றார்.

'சமயாசமய ஊழியர்களின் சார்பில் திரு. த. இரத்தினம் பேசுகையில், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், அதன் சுபீட்சத்திற்கும் ஆணிவேராக நின்று தம்மைத் தியாகிகளாக அர்ப்பணித்த தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் கேட்கும் பொழுது, கோரிக்கைகள் முன்வைக்கும் பொழுது அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு ,,வெறுக்கப்படுகிறார் ள்' என்று கவலை தெரிவித்தா .

## நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு[

வட்டுக்கோட்டைத் தொகுதியில் பன்முகபபடுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சில அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்தை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு மாற்றி வேறுசில செய்து முடிக்கக்கூடிய திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளார்.

பொன்னுக்குளம் புனரமைப்பு போன்ற சில திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி பணமான 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை சம்பந்தப்பட்டவர்கள் உரிய காலத்தில் பயன்படுத்தத் தவறியதன் காரணமாக இவ்வாறு இவ்வருடத்திற்குள் செய்யக்கூடிய அவசியமான வேறு திட்டங்களுக்கு இவர் ஒதுக்கியுள்ளார். (உ)

## அவசரம்

(கோண்டாவில்)

மருதனுமடம் புகையிர நிலயத்திற்கு அருகில் உள்ள புகையிரதக் கடவை உழவு யந்திரத்தினல் இடித்து முறிக்கப்பட்டுள்ளது.

புகையிரதக் கடவையை முறிக்கஉழவுஇயந்திரம் உரும்பராயில் இருந்து மருதனமடம் நோக்கி வந்ததாம். அச்சமயம் புகையிரதம் வருவதற்காக கடவைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. கடவைக் கதவை அடித்துமுறித்த உழவு இயந்திரம் உடனடியாக அவ்விடத்தைவிட்டு செலுத்தப்பட்டுள்ளது. புகையிரத முகவர் சுன்னுகம் பொலிஸ் நிலயத்தில் இதுபற்றி முறைப்பாடு செய்துள்ளார். (உ)

## இடமாற்றம்

('வலனை)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் தமது புதியகட்டடத்துக்கு டிசம்பர் மாதத்தில் இடமாறவுள்ளது. இதேபோன்று கொடிகாமம் வீதியில் இருக்கும் மக்கள் வங்கியும் யாழ். பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்திற்கு இடமாறவுள்ளது. (உ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் பருத்தித்துறை வீதி 177-ம் இலக்கத்தில் வதிந்த வைத்திலிங்கம் சிங்கவேலுவின் மனைவி தேவசேனு என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

வைத்திலிங்கம் சிங்கவேலு, இல. 177, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தற்போது கல்வளை, சண்டிலிப்பாய்.

மனுதார்

மரணசாதன ) இல.
நியாயாதிக்க ) ரி/3250

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

வரைவு:
சு. செ. மகாதேவா.
மனுதா டத்தரணி.
0706

## 9 பிள்ளைகளின் தாய் தற்கொலை!

(கொடிகாமம்)

ஒன்பது பிள்ளைகளின் தாய் ஒருவர் நாவல் மரத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் மட்டுவிலில் நடைபெற்றுள்ளது.

சின்னப்பொடி வல்லிபுரம் என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டவராவார்.

சம்பவதினம் பிள்ளைகளுக்கும் தம் கணவருக்கும் உணவு பரிமாறி விட்டு நித்திரைக்குச் சென்றாராம்.

அதிகாலை அவர் நாவல் மரத்தில் தூக்கிட்டுத்தொங்கக் காணப்பட்டாரம்.

இப்பெண் மன நோயால் பாதிக்கப்பட்டிருந்தாராம்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ)

## "கிறிஸ்தவ மார்க்கத்தின்படி அனைவரையும்நேசிப்போம்"

[யாழ்ப்பாணம்]

"கிறிஸ்தவர்களின்வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். கிறிஸ்து பெருமான் சமூகத்திலிருந்து விலகி வாழாமல் மக்களோடு மக்களாக வாழ்ந்தார். யேசுபிரான் தமது வாழ்க்கையில் கண்டதை தெரிவித்ததாலேயே மக்களோடு இணைந்து வாழ்ந்தார். நாம் நமது நாளாந்த சீவியத்தில் மற்றவர்களை யோசித்து - மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழவேண்டும். இதுவே கிறிஸ்துவம் கூறுவதும்"

இவ்வாறு தர்மபுரம் பரிசுத்த லூக்கா ஆலய ஆண்டு விழாவில் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர்சிங்கன் அடிகளார் அருளுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

அருட்திரு யோன் ஐசாயா அடிகள், அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளின் உதவியுடன் திருவிருந்து ஆராதனையை ஒப்புக்கொடுத்தார்.

அருட்திரு சாம் டி ஹோர்சிங்கன் அடிகளார் தொடர்ந்து பேசுகையில், மற்றவர்களுக்காக நாம் வாழ முயலவேண்டும். மொழி, சமயம், கலாச்சாரம் என்பவற்றில் மிகவும் வேறுபாடான தத்துவங்களைக் கொண்ட யூத மக்களுடன் இறைவன் பிறஜாதியாரை ஒன்றுபடுத்தினர். நாம் எல்லோரும் அன்பு, சேவை, தியாகம் உள்ளவர்களாக வாழமுயலவேண்டும்" என்றார்

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்விழாவில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். ஆராதனையின் இறுதியில் தர்மபுரம் நண்பர்கள் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாக தலைவர் அருட்திரு சாம் டி ஹோர்சிங்கன் அடிகள், செயலாளர்: திருமதி குணசேகரம், பொருளாளர் திருமதி இராசரத்தினம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

(அரியாலை நிரு. உ)

## இவர்களுக்கும் வேலைவாய்ப்பு

(புலோலி)

தொழில்நுட்பக் கல்லூரிகளில் தேசிய தராதரப்பத்திரம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புஅளிக்கப்படவுள்ளது.

யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரி வணிகமாணவரின் முயற்சியைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சில் தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர்பதவி வெற்றிடங்களில் தொழில்கற்கைகளிலான தேசிய தராதரப்பத்திரம் சுருக்கெழுத்து தட்டெழுத்து தராதரப்பத்திரம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் உயர்கல்வி அமைச்சிலை கோரப்பட்டுள்ளன

தொழில் நுட்பக் கல்வி மேலதிக பணிப்பாளர் திரு. பொன்சேகா யாழ். தொழில் நுட்பக்கல்லூரிக்கு விஜயம் செய்ததையடுத்து, இத்தொழில்நுட்பக் கல்லூரியின் வணிகமாணவ மன்றத்தலைவர் திரு. ஆ. பி மரியசிலன், செயலாளர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் ஆகியோரைக் கொண்ட தூதுகோஷ்டி தமது தேசிய தராதரபத்திரத்திற்கு தகுந்த வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை என்றும் இதற்குத்தகுந்த நடவடிக்கை எடுத்து தேசிய தராதரப் பத்திரத்திற்கு தொழில் வாய்ப்புக்களில் தகுந்த இடமளிக்கவேண்டுமெனவும் கோரியபோது இத்தேசிய தராதரப்பத்திரத்திற்கு தொழில் வாய்ப்புக்களில் தகுந்த இடம் வழங்கப்படுமென தொழில் நுட்பக்கல்வி மேலதிக டணிப்பாளர் உறுதி கூறிச்சென்றது குறிப்பிடத்தக்கது. (உ)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம், ஒருபுதிய (Olivetti) ஒலிவட்டி ரகத்தைச் சேர்ந்த தூக்கிச் செல்லக்கூடிய தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: ப. சந்திரசேகரம் 15, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0701

நல்லநிலைமையில் சொந்தப் பாவிப்பில் இருக்கும் ஸ்ருவார்ட் சிக்சாக் (STEUART ZIG ZAG MODEL) கால் தையல் மெசின் ஒன்றும் இங்லிஸ் மேக் பெண்பிள்ளைகள் பாவிக்கும் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. 179 நாவலர் வீதி, வண்ணார் பண்ணை. 0709

### தவறிவிட்டது

29-10-78ந்திகதிஇரவுநவீன சந்தை பக்கரோட்டில் சுமார் நாற்பது புகைப்படங்களுடன் கவர், கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தகவல் தரவும். V. கதிரவேலு, 115, கச்சேரி நல்லூர் ரோட், நல்லூர். 0710

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

வழக்கு இல. ஈடு14935

உரும்பராய் தெற்கு, உரும்பராய். — விஞசித்தம்பி சின்னத்துரை — வாதி

எதிராக

111/2, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம். — 1. கண்மணி இராமலிங்கமும் 2. பெண் யோகம்மா. — பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு ஈடு 14935-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் திகதி (23-11-78) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 7,094/-ம், 10-7-75 தொடக்கம் 2-11-76 வரை ரூபா 5000/-க்கு 14 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 664-70 சதமும் தீர்வையில் ரூபா 2000/-ம் செலவில் ரூபா 650/-ம் கழிபடவேண்டும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "தவசிவெளி" நிலப்பரப்பு 5 குளி 3½. இதில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு 3. இதில் கிழக்குட புறமாக பாதைக்காகவிடப்பட்ட 2 குளி நீக்கி மிகுதி நிலப்பரப்பு 2 குளி 16, இந்த நி, ப. 2 குளி 16ம் கல்வீடும் கிணறும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கு பொது ஒழுங்கை, வடக்கு செல்லர் நடராசாவுக்குரிய மிகுதி ஆதனம், மேற்கு ஆறு அடி கையொழுங்கை, தெற்கு ஒழுங்கை இடங்கலும். இன்னும் கிழக்கேயுள்ள பொது ஒழுங்கையில் இதற்குரிய பங்குப்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
16-10-78. 0703

## ஏலவிற்பனை

மாவை முருகன் திருப்பணிச்சபையினர் நடாத்திய அதிர்ஷ்டலாபச்சிட்டுக்குரிய கோரப்படாத பின்வரும் பொருட்கள் 6-11-78 திங்கட்கிழமை பிற்பகல் 7 மணியளவில் மாவை முருகன் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள சுவடிச்சாலையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

### பொருட்கள் விபரம்

புதிய துவிச்சக்கரவண்டி (ரும்)........1
புதிய நைலக்ஸ் சேலை.......................1
எவர்சில்வர் குத்துவிளக்குகள்............8 சோடிகள்
எவர்சில்வர் சந்தனக்கும்பா.............8 தனி
எவர்சில்வர் பன்னீர்ச்செம்பு..............8 தனி

### மாவை முருகன் திருப்பணிச்சபை

மாவிட்டபுரம்.
30-10-78. 0708

ஈழநாடு
The Eelanaadu

## இலங்கை-இந்திய ஒத்துழைப்பு

பொருளாதாரத்துறையிலும் ஏனைய துறைகளிலும் இலங்கையும் இந்தியாவும் மேலும் நெருக்கமாக இணைந்து செயல்படவுள்ளதாக இலங்கை - இந்தியத் தலைவர்களின் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன இந்தியாவுக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்து இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனகவே இருநாடுகளும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதென்று தீர்மானித்திருக்கின்றன.

இலங்கையும் இந்தியாவும் கலை கலாசாரத்துறைகளில் நீண்டகாலத் தொடர்புடையவை. பௌத்த மதமே இந்தியாவில் தான் உற்பத்தியானது. ஆனலும் இந்திய வம்சாவளியினர் சம்பந்தமான பிரச்னை இரு நாடுகளுக்குமிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்தது இன்று ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவின் தலைமையிலான அரசு சில சலுகைகளை வழங்கி இந்த மனக்கசப்பை அகற்றுவதற்கு வழிசெய்துள்ளது.

இருநாடுகளுக்குமிடையில் நீண்டகாலமாக நட்புறவு இருந்த போதிலும் வர்த்தகத்துறையில் ஒரு வழிப்பாதையே இன்னமும் நிலவி வருகின்றதென்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

என்னதான் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதிலும் வர்த்தகத்துறையில் ஒருவழிப்பாதையே கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவின் இந்திய விஜயம் இந்தநிலையில் மாற்றம் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

எந்தவகையில் பார்த்தாலும் ஜனதிபதி ஜே. ஆர், ஜயவர்த்தனவின் இந்திய விஜயம் இலங்கைக்கு நன்மையே அளித்திருக்கிறது. இந்த வகையில் ஜனதிபதி திரு ஜே.ஆர். தமதுமுதலாவது வெளிநாட்டு விஜயத்தில் வெற்றிபெற்றுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

### மணிவாக்கு

உனது குற்றங்குறைகளை உணர். பிறரில் நல்லதையே பார். அவர்கள் நற்குணங்களையும் புகழ்.

—ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி

## பொதுசன நூல்நிலையம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழைப் பகுதி வாசகர்களின் நன்மைகருதி தெல்லிப்பழை கிராமசபை பொதுசன நூல்நிலையம் தற்போது இரவு 8 மணிவரை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் மாலையில் மட்டுமே திறக்கப்பட்ட இப் பொதுசன நூல்நிலையத்தை வாசகர்களது நன்மைகருதி தெல்லிப்பழை கிராமசபை விசேட ஆணையாளர் திரு. க. மகாதேவா காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை திறந்துவைக்க நடவடிக்கை எடுத்திருந்தார். இதற்கென பொறுப்பதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ)

# ரேகணவிஜயவீரா தமிழரை இயக்கத்தில் சேர்க்காதது ஏன்?

## முற்றவெளிக் கூட்டத்தில் சந்ததியார் கூறியகாரணம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்நாட்டில் அண்ணுத்துரை வெற்றிபெற்றால், யாழ்ப்பாணத்தில் வெடிகொளுத்தி மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள். மலைநாட்டில் வாழும் தமிழ்மக்கள் இந்தியாவையே தங்கள் தாய்நாடாகக் கருதி இங்கிருந்து உழைத்த பணத்தை இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இதனல்தான் தங்கள இயக்கத்தில் தமிழர்களைச் சேர்க்கவில்லையென மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோகண விஜயவீரா சிறைச்சாலையில் எங்களிடம் தெரிவித்தார்."

யாழ். முற்றவெளியில் நடந்த தமிழ் இளைஞர் பேரவைப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. த. சந்ததியார் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சந்ததியார் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணம் வந்த திரு, ரோகண விஜயவீரா சிறைச்சாலையில் ஒரு தமிழ் இளைஞர் தமக்குத் துவாய் ஒன்றைத் தந்து தமது மானத்தைக் காப்பாற்றியதாகவும் அதனலேயே இங்குவந்ததும் அவர் வீட்டிற்குப் போய் சாப்பிட்டதாகவும் கூறினர்.

### தாங்கள் செய்த உதவி

"சிறைச்சாலையில் அவருக்கு நாங்கள் எத்தனையோ உதவிகளைச் செய்தோம். அவற்றையெல்லாம் அவர் வெளியிடவில்லை. நாங்கள் இருந்தது றிமாண்ட் சிறையில், எங்களை வெளியிலிருந்துவந்து எவரும் சந்திக்கலாம். ஆனல்ரோகண விஜயவீராவைச் சந்திக்கமுடியாது. அவரது சகோதரர் சாப்பாட்டுப்பார்சல் கொண்டு வந்து எங்கள்மூலம்தான் விஜயவீராவுக்கு அனுப்புவார்.

நாங்கள் செய்த உதவியை அவர் வெளிப்படுத்தாததற்குக் காரணங்கள் உண்டு. மக்கள் விடுதலை முன்னணியின் போக்கை நாங்கள் நன்கு அறிந்துகொண்டோம். அவர்கள் 5 வகுப்புகள் நடத்தினர்கள், முதல்வகுப்பில் சுதந்திரம் என்றால் என்ன? என்பதாகும். இரண்டாவது வகுப்பு பொருளாதார நெருக்கடி பற்றியதாகும் மூன்றுவதுதான் தமிழருக்கு பாதகமானது. இந்தியவிஸ்தரிப்புப்பற்றியது. நான்காவது இடதுசாரிகளின் தவறன பாதை என்பதாகும். ஐந்தாவது வகுப்பு மக்கள் விடுதலை முன்னணியின் பாதை என்ன? என்பதாகும்.

### வியாபிக்கும் நோக்கம்

இந்தியாவுக்கு விஸ்தரிப்பு நோக்கம் உள்ளது என்பது அவர்கள் முடிவாகும். சீன எல்லைப்போர், நாகாலந்து விவகாரம், காஷ்மீர் பிரச்னை ஆகியவற்றை ஆதாரங்களாக காட்டி வகுப்பு நடத்தினர்கள். கடந்தகாலத்தில் இந்தியாவிலிருந்துவந்த தமிழர் படைகள், இந்நாட்டில் புகுந்ததுபற்றிக் கூறினர்கள். இந்திய விஸ்தரிப்புக்கு இலங்கைத் தமிழர்கள் ஆதரவாக இருக்கிறார்கள் என்பது அவர்கள் முடிவு. அதனல்தான் எங்களைச் சேர்க்கவில்லை. அந்த இயக்கத்தில் ஒரு தமிழ்இளைஞராவது இருக்கவில்லை.

லுமும்பா பல்கலைக்கழகத்தில் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் பயின்றார்கள். மலைநாட்டில் எத்தனையோ சிங்களம் தெரிந்த தமிழ் இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களைச் சேர்க்கவில்லை,

### நிதிக்கட்டுப்பாட்டை மீறுகிறோமாம்

"வடக்கிலுள்ள தமிழர் கள்ளக்கடத்தல்மூலம் நாட்டின் நிதிக்கட்டுபாட்டை மீறுகிறார்கள். திராவிடமுன்னேற்றக்கழகத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணத் தமிழர் இருக்கிறார்கள் என்றெல்லாம் வகுப்பில் பிரசாரம் செய்தனர். இப்படியானவர்கள்தான தமிழினத்திற்கு வாழ்வழிக்கப் போகிறார்கள்?

71ம் ஆண்டு 10,000 இளைஞர் கொல்லப்பட்டு. 18,000 இளைஞர்கள் சிறைவைக்கப்பட்டனர். இப்படிப்பலம் வாய்ந்த இயக்கம் பரவலாகத் தென்னிலங்கை முழுவதும் இருந்தநேரத்தில், ஆகஸ்ட் கலவரம் நடந்திருக்கிறது. உண்மையில் இவர்களுக்குத் தமிழினத்தில் அக்கறையிருந்தால் இதனைத் தடுத்துநிறுத்தியிருக்கமுடியாதா?

### எழுத்துமூலம் ஆதாரம்

இவற்றையெல்லாம் இங்கு கற்பனைமூலம் சொல்லவில்லை, சிறையிலிருந்தபோது ரோகண விஜயவீராவுடன் தொடர்பு கொண்டு எழுத்துமூலம் ரோகணவிஜயவீராவிடமிருந்து பதில்பெற்றுப் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம்.

71ம் ஆண்டு இயக்கத்தில் வடஇலங்கை இளைஞரின் ஆதரவைப் பெற்றிருந்தால் அரசாங்கத்தைக் கைப்பற்றியிருக்கலாம் என இப்போது அவர்கள் கருதுகிறார்கள். தென்னிலங்கை வாலிபர்களை இங்கு கோட்டை சிறைச்சாலையில் அடைத்து வைத்தார்கள். இங்கே பாதுகாப்பு உண்டு என்று அரசுக்குத்தெரியும். வடக்கிலும் அதேநேரத்தில் புரட்சிப்போராட்டம் நடந்திருந்தால் அரசு திக்குமுக்காடியிருக்கும். சிறைச்சாலையை உடைத்து சிங்கள வாலிபர்களைக் கடல்மார்க்கமாக வெளிநாட்டிற்கு அனுப்பியிருப்பார்கள்.

### தொண்டனுக்கு இடமில்லை

"இந்நாட்டில் எந்த ஒரு இயக்கத்திலும, காலம் காலமாகத் தொண்டராக இருந்தவர்கள், கட்சிக்குத் தொண்டுசெய்துவிட்டு மடிந்து விடுவார்கள், ஆனல் இடையில் வந்தவர்கள் பணத்தையும் பட்டத்தையும் காட்டி ஒப்பந்தத்தையும் உடன் பாட்டையும் எழுதித் தலைவராக வந்துவிடுவார்கள். பணம், பதவி பட்டம் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தொண்டன் இறந்துவிடுகிறன். இப்படியே காலத்துக்குக் காலம், கட்சிக்கு புதிய தொண்டர்கள் வந்து கருகி மடிந்துவிடுகிறார்கள். தொண்டர் தலைமைப் பீடத்திற்கு தலைமை தாங்க வரக்கூடிய அமைப்பு இயக்கத்தில் இல்லை

"பெரிய பணக்காரர்கள்; நாலுபேரை வைத்து கட்சி நடத்துகிறவர்கள் வந்தால், அவர்களுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து அவருக்குத் தலைமைப் பதவி கிடைத்துவிடுகிறது. இதனல் கட்சித்தொண்டர் பின்தள்ளப்படுகிறார்.

### தொகுதி கிடைக்காததினல்

"தமிழ் ஈழம் வேண்டும் என்றவர்கள், தொகுதி கிடைக்காத காரணத்தினல் அந்த இயக்கத்தைத் தாக்கிப் பேசுகிறார்கள். அவர்கள் பணம் படைத்தவர்கள் என்ற காரணத்தினல் வாலிபர் பின்னல் திரிகின்றனர்.

### சட்டத்தரணிகளும் பட்டதாரிகளும்

பல்கலைக் கழகத்தில் பயின்ற பட்டதாரிகளும் சட்டக்கல்லூரியில் பயின்ற சட்டத்தரணிகளும்தான் இந்நாட்டில் அரசியல் வாதிகள்; அவர்கள்தான் தமிழ் மக்கள் பற்றிப் பேசக் கூடியவர்கள் எனச் சமுதாயம் நினைக்கிறது.

### ஏழைகளுக்கு இடமில்லையா?

"ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள், உயர் படிப்பறிவில்லாதவர்கள், பட்டம் பெறுதவர்கள் மக்களைவழிநடத்த தகுதியற்றவர்களா? கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று இளைஞர்களுக்கு இன்று எம். பி.க்கள் அறிவுரை கூறுகிறார்கள். ஆனல், தேர்தல் காலத்தில் இளைஞர்களைப் பார்த்து இந்த அறிவுரையை அவர்கள் வழங்க முன்வரவில்லை. வெற்றிதான் அவர்கள் குறிக்கோளாக இருந்தது. இன்று தங்களுக்குச் சங்கடம் என்ற காரணத்தினல் கட்டுப்பாடு பற்றிக் கதை பேசுகிறார்கள். வாலிபர் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தால் வேலைக்கிப் படிவம் கிடைக்கவில்லை. அதனல்தான் பேசுகிறன். என்பார்கள். போனமுறை வேறு அணியில் நின்றவர்கள் என்று கூறுவார்கள்.

தமிழ்இளைஞர்பேரவையினர் கூட்டணித் தலைமையை ஏற்கிறார்கள். ஆனல் தனித்து இயங்குவார்கள். கூட்டணிப் பொதுச் சபையில் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

இதுவரைகாலமும் இளைஞர் பேரவை கூட்டணியின் வாலிப முன்னணியாக இருந்துவந்தது. கட்சியின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைத்து வந்தது. இனிமேல் அப்படி இருக்காது, தனிப்பட்ட எம். பி. கையைப் பலப்படுத்துவது பிழையாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை விடுதலைப்பாதையில் சமத்துவமாக நேசசக்தியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எந்தவிதத்திலும் விடுதலைக்கு மாறானவற்றுக்கு கட்டுப்படமாட்டோம். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஆறு இயக்கங்கள் உண்டு. அதேபோல் தமிழ் இளைஞர்பேரவை ஒன்ருக இருக்கும்.

தமிழ் இளைஞர் பேரவை தனித்துவமாக இயங்கி தமிழ் ஈழத்தை மீட்கமுடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. கடந்த அரசின் திட்டம் பொருளாதார அடிப்படையில் இருந்தது. இந்த அரசிடம் திட்டம் இல்லை.

### மாவட்ட அமைச்சர் பதவி

தற்போது மாவட்ட அமைச்சர் பதவி விஷயமாகத் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. குழப்பமான நிலையில் விடுதலைப்பாதையை நோக்கிச் செல்ல முடியாது.

"மதசார்பற்ற சமதர்ம தமிழ்ஈழ குடியரசை அமைத்து ஆள்வதே தமிழ் இளைஞர் பேரவையின் நோக்கமாகும். உலக அரங்கில் அணிசேரா கொள்கையைக்கடைப்பிடித்து ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக ஏனைய ஜனநாயக அணிகளுடன் சேர்ந்து போராடுவோம். தமிழ் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்றுக்கொண்டு அதேவேளையில் தனித்துவமாக இயங்கும் உரிமை உண்டு.

### தமிழ்ஈழ முஸ்லிம்கள்

"தமிழ் ஈழ இஸ்லாமியர், சுயநிர்ணய அடிப்படையில் தமக்குரிய உரிமையை நிலைநாட்ட அங்கிகரித்து ஆதரிப்போம்.

தமிழினத்தின் பாரம்பரிய தாயகத்தில் மொழி, பொருளாதாரம், பண்பாடுகளை இவற்றைப் பேணிப்பாதுகாப்பது தமிழ் இனத்தின் சமூக சாதி அடக்கு முறையை எதிர்த்து மூடப்பழக்கவழக்கங்களை அடியோடு ஒழித்து புரட்சிகரமான சமுதாயத்தை உருவாக்குவது-

### தமிழினத்தை பலப்படுத்தி...

தமிழினத்தை மக்கள் விடுதலை இயக்கமாக சுதந்திரத்திற்குத் தயாராகும் சக்தியாகப் பலப்படுத்தி வழிநடத்துவது-

மேற்கூறிய அமைப்பு விதிகளைக் கொண்ட பேரவை இன்று முக்கியமான தீர்மானங்களை எடுத்துள்ளத.

### தங்குமடம் ஏற்படும் மாவட்ட அமைச்சர் பதவி

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ஈழப்யாழ்குடாநாட்டில் நிறுவிஞலும் வரவேற்போம்

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரக் கட்சி ஆட்சியின்போது சிறைவைக்கப்பட்ட தமிழ் இளைஞர்பற்றி, உலக அரங்கிலும், பாராளுமன்றத்திலும் குரல் எழுப்பிய தமிழ் தலைவர்கள் இன்ற யூ. என். பி. அரசு, தமிழ் இளைஞர்களை சிறை வைக்கும்போது குரல் எழுப்பாமல் மௌனமாக இருக்கிறார்கள். ஒரு தமிழ் எம் பி. கூட குரல் எழுப்பவில்லை."

யாழ். முற்றவெளியில் நடந்த தமிழ் இளைஞர் பேரவை பொதுக் கூட்டத்தில் பேசிய பட்டிருப்பு கிளையைச் சேர்ந்த திரு. மதுரநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. த. சந்ததியார் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், திரு. மதுரநாயகம் மேலும் கூறியதாவது:-

"சிறையிலிருக்கும் இளைஞர் பற்றி குரல் எழுப்ப ஒரு எம். பி. கூட முன்வரவில்லை. ஏதோ தெரியவில்லை; எல்லாரும் தயங்குகிறார்கள். கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டு நடைபெறுகிறது. தமிழ் மக்களின் அவலக்குரல் நெஞ்சை உருக்குகிறது சிங்களக் குடியேற்றத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நாங்கள். அரசைச் சேர்ந்த நிதி அமைச்சர் திரு தேவநாயகம், மாவட்ட அமைச்சர் திரு. கனகரத்தினம் ஆகியோரால் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தைத் தடுக்கமுடியவில்லை. கூட்டணியினர், மாவட்ட அமைச்சர் பதவிகள் பெற்று எப்படித் தடுக்க முடியும். எம். பிக்கள் சில அறிக்கைகளை விட்டுத் தமிழினத்தை குழப்பியடிக்கின்றனர்.

நாங்கள், எந்த அரசியல் கட்சியின் தயவிலும் தங்கியிருக்கவில்லை. தமிழ் ஈழம் பெறபாடுபடும் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம்.

எந்த ஒரு மாவட்ட மந்திரியாலும் தடுத்து நிறுத்தமுடி

[6-ம் பக்கம் பார்க்க]

# தோல்வியை எதிர்பார்ப்பதால் வன்முறையில் ஈடுபடுகின்றனர்

## இந்திராகாங்கிரஸ் மீது ஜனதா குற்றச்சாட்டு

சிக்மகளூர், அக். 31

''சிக்மகளூர்தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் தோல்வி கிடைக்கும் என்றஅச்சத்தில் வன்முறையில்ஈடுபட்டு வருகின்றனர்.''

இவ்வாறு ஜனதாகட்சி பொதுச்செயலாளர் திரு.ராமகிருஷ்ண கெக்டே தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக ஜனதாக்கட்சித் தொண்டர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டு வருகின்றனர் என்றும் பெண் தொண்டர்களைக்கூட இந்திரா காங்கிரஸ்கட்சியினர் தாக்கத்தவறவில்லை என்றும் திரு கெக்டே தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிக்மகளூர் தேர்தலில் சுதந்திரமான-நேர்மையான தேர்தலை ஜனநாயகரீதியில் நடத்த கர்நாடக மாநில அரசு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் திருகெக்டேவேண்டுகோள் விடுத்தார். (இ)

# சிக்மகளூர்தேர்தல்:

## ஜெயப்பிரகாஷர் கருத்து

பட்னு, அக். 31

''சிக்மகளூர் இடைத்தேர்தலில் கிடைக்க இருப்பது ஒரு தனி நபரின் வெற்றியல்ல; கடந்த 18 மாதங்களுக்குமுன்னர் நீண்ட போராட்டத்தினுல் மீட்கப்பட்ட ஜனநாயகம், விடுதலை, நீதி ஆகியவற்றின் வெற்றியாகும்.''

சிக்மகளூர் இடைத்தேர்தல் குறித்து சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிக்மகளூர் இடைத்தேர்தல் லோகசபைக்கு ஒரு உறுப்பினரைத் தெரிவுசெய்வதற்கு மட்டும் நடைபெறவில்லை; அந்த இடைத்தேர்தலில் அதிக பிரச்னைகள் சம்பந்தப்பட்டுள்ளன.

கொடுங்கோன்மைஆட்சிக்கு காரணமாக இருந்தவர்கள் தாம் இயற்றிய அவசரகாலச் சட்டம் சரியானதே என்று இன்றும் வெட்கமின்றி கூறுகிருர்கள்.

கடந்ததேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் தாமே ஜனநாயகத்தின் காப்பாளர்கள் என்று கூறிக்கொண்டு தமக்குக் கிடைத்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள்முன் வந்துளனர். மக்கள்தான் அவர்களுக்குச் சரியானபாடம் கற்பிக்கவேண்டும்.'' (இ-உ)

### ஜனதாவுக்கு ஆதரவாக விலகினுர்

சிக்மகளூர், அக். 31

சிக்மகளூர் இடைத்தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் ஜனதா கட்சி வேட்பாளர் திரு.வீரேந்திர பட்டீலுக்கு ஆதரவளிக்கு முகமாகத் தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

இவரைத் தவிர்த்து இப்போது 26 பேர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். (இ)

### கொட்டும் மழையிலும்...

சிக்மகளூர், அக் 31

சிக்மகளூரில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இந்திரா காங்கிரஸ்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் திருமதி காந்தி உரையாற்றிக் கொண்டிருந்தபோது கொட்டும் மழையிலும் அசையாதிருந்து பெருந்திரளான மக்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்தனர். (இ)

### இந்தியாவில் மூளைக்காய்ச்சல் 1,000பேர் பலி!

புதுடில்லி, அக் 31

இந்தியாவில் மூளைக் காய்ச்சலுக்கு சுமார் 1000 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

அண்மையில்வெள்ளம் பாதித்த உத்தரப்பிரதேசத்தில் 42 பேரும், மேற்கு வங்காளத்தில் 500க்கும் அதிகமானேரும் மூளைக்காய்ச்சலால் இறந்துள்ளனர். (இ)

### தீபாவளி

புதுடில்லி, அக். 31

டைஇந்தியாவில் இன்று செவ்வாய்க்கிழமை சகல இடங்களிலும் தீபாவளி கொண்டாடப்பட்டது. (இ)

அரபு-இஸ்ரேல்பேச்சுவார்த்தை:

# காம்ப்டேவிட் உடன்பாட்டை

## எதிர்க்க 21 அரபு நாடுகள் முஸ்தீபு

பக்தாத், அக் 31

காம்ப்டேவிட் மகாநாட்டு அடிப்படையில் அமெரிக்காவில் நடைபெறு வரும் இஸ்ரேலிய-எகிப்தி மரசப் பேச்சுவார்த்தைகளில் காணப்படும் உடன்பாடுகளை அமுல் செய்வதைத் தடுப்பது குறித்து 21 அரபு நாடுகளும் பக்தாத்தில் கூடி ஆராய்ந்து வருகின்றன.

இவ்விஷயம் குறித்து விரிவாக ஆராயும் பொருட்டு, எதிர்வரும் வியாழக்கிழமை மகாநாடு ஒன்றை நடத்துவதற்கும் இந்நாடுகள் தீர்மானித்துள்ளன.

காம்படேவிட் மகாநாட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளை அமுல் செய்வதைத் தடை செய்யும் அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகள் குறித்து இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது

# ஜனதா ஆட்சியில்

## மக்கள்பீதி அடைந்துள்ளனர்

### சிக்மகளூரில் இந்திராகாந்தி

சிக்மகளூர், அக். 31

''ஜனதாகட்சி ஆட்சியில்மக்கள் பெரும் பீதியுடன்வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இந்நிலையில் பீதியடைந்துள்ள வறிய, சிறுபான்மைமக்களினது நலன்கருதியே நான் சிக்மகளூர் இடைத்தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.''

இவ்வாறு திருமதி இந்திரா காந்தி சிக்மகளூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

தமது ஆட்சிக்காலத்தின் போது உருவாக்கப்பட்ட பல சோஷலிஸ்த்திட்டங்கள் இப்போது மாற்றப்பட்டுள்ளன என்றும் கூறிய திருமதிகாந்தி, ஜனதாகட்சிக்கு திடமான பொருளாதாரத் திட்டம் இல்லையென்றும் தெரிவித்தார்.

உகண்டாவின் உள்நாட்டுப்

# பிரச்னைகளை மூடிமறைக்க இடிஅமின் புரளி கூறுகிருர்

## கென்யா பத்திரிகை குற்றச்சாட்டு

நைரோபி, அக். 31

உகண்டாவில் உள்ள உள்நாட்டுப் பிரச்னைகளை மூடிமறைப்பதற்காக உகண்டா அதிபர் ஜெனரல் இடிஅமின் புரளிகளைக்கூறி வருகிருர். என்று கென்யா பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

உகண்டாவில் உள்நாட்டுப் பிரச்னைகளை மூடிமறைத்து உலகின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்காகவே தான்சானிய-உகண்டா எல்லையில் தான்சானியப் படைகள் ஊடுருவல் நடத்தி வருவதாக உகண்டா வானொலி நான்கு நாட்களாகத் தொடர்ந்து அறிவித்து வருகின்றது என்றும் கென்யா பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன. (இ)

### ..ருகண...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களை கூட்டணியினர் ஏற்கக்கூடாதென்பதற்கு பல காரணங்கள் உண்டு. நாம்பெற்ற மக்கள் ஆணையை மாவட்ட அமைச்சர் பதவி மீறச்செய்யும் மாவட்ட அமைச்சர் பதவி ஏற்பதால் விடுதலைப் பாதையில் ஒரு தங்குமடம் ஏற்பட்டுவிடும்.

'தமிழ் பிரதேசம் என்று ஒன்றிருப்பதை ஏற்கமறுக்கும் அரசிடம் மாவட்ட மந்திரி பதவி ஏற்றுக் குடியேற்ற பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது. உலகில் தமிழ்' ஈழ போருக்கு ஏற்பட்டு வரும் ஆதரவை மாவட்ட அமைச்சர் பதவி இழக்கச் செயயும்.

சர்வதேச சட்ட அரங்கில் தமிழ் ஈழம் பெறும் பாதுகாப்பை மாவட்ட அமைச்சர் பதவி இழக்கச் செய்யும்.

போராடும் சக்தி வலுப்பெற்றுவரும் போது, மாவட்ட அமைச்சர் பதவி ஏற்பதால் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டதாக முடியும் (க-அ)

### கரவெட்டி ஆஸ்பத்திரிநிலை

(நெல்லியடி)

கரவெட்டி அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகள் இருப்பிட வசதியின்றி கஷ்டப்படுகின்றுர்கள்.

பெருமளவில் நோயாளிகள் தினமும் வைத்திய சாலைக்கு வருவதன் காரணமாக இருப்பிடவசதி பற்றுக்குறையாக உள்ளது. ஆண்களும் பெண்களும் ஒன்ருக இருக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இக்குறைகள் தீருமா என வருத்தத்துடன் கேட்கப்படுகிறது. (உ)


புதிய

ஹெடோனல் 'எம்'

40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லிகளை விட்டு வைக்காமல் வேரோடொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்.



விளைபொருள்களை உறுதுணை நின்று காக்கும் ஹெடோனல் 'எம்',

நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோனல் 'எம்'.

நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள் !

மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் :
பேயர்
ஜெர்மனி

இலங்கையில் தயாரிப்போர் :
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.



P-91246

Rio (Jaffna
Phone: 7607
Dily 4 Shows

Great Scout
Family Entertainment

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவகுமார்-லோறன்ஸ்
மேல்நாட்டு மருமகள்

# பதுளையில் ''ஹரேகிருஷ்ண'' குழுவினர்

[பதுளை]

பதுளை இந்துமகா சபையின் ஆதரவில் அகில உலக ''ஹரே கிருஷ்ண பக்தி கழகத்தின் பிரதம குரு ஹம் சதுட்ட ஹராஜ் குழுவினரது நிகழ்ச்சி பதுளை சரஸ்வதி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது, சபையின் உபதலைவர் சட்டத்தரணி த ஸ்ரீ. பத்மநாதனின் உரையைத் தொடர்ந்து பஜனையும் பிரதம குருவின் சொற்பொழிவும் படக்காட்சியும் இடம் பெற்றன.

சபைத்தலைவர் டாக்டர் சி. சண்முகநாதன் நன்றியுரை நிகழ்த்தினர். (ஈ)

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா [யாழ்ப்பாண.] இன்றுமட்டும் தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர், அஞ்சலிதேவி நடித்த
மர்மயோகி (புத்தம்புதிய பிரதி)
2-11-78 முதல் பொலீஸ்காரன்மகள்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 3 காட்சிகள் சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நிலவே நீ சாட்சி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7696 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதியபிரதி]

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
அவள் புதிய பிரதி வண்ணப்படம்

ராஜா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
ஃ செல்வம் பெர்னாண்டோ ஃ டொன்பொஸ்கோ
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்

# "அரசின் திட்டங்களை மாவட்ட மந்திரிகள் செயல்படுத்த வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

'மாவட்ட மந்திரி பதவிகளினல் தமிழினத்திற்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இவ்வருடம் ஜூன் மாதம் 22-ம் திகதி மாட்ட சபை பற்றியவெள்ளைஅறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்' இன்று வரை கூட்டணியினர் அதில் உள்ளவற்றை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறவில்லை'

சுழிபுரத்தில் நடந்த தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ?க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: மாவட்ட மந்திரிபதவியை ஒரு கருவியாக பாவித்து சிங்கள குடியேற்றத்தை தடுக்கவும், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் எனக் கூட்டணியினர் கருதுகின்றனர்.

பிரதமரினல் 20 சரத்துக்கள் கொண்ட 2 பக்க மாவட்ட மந்திரிபற்றிய வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனல் இதுபற்றி கூட்டணியினர் மூச்சுவிடவில்லை அதுபற்றி ஆராயவுமில்லை.

-ம் சரத்துப்படி மாவட்ட அமைச்சர், ஜனதிபதிக்கும் அமைச்சருக்கும் கணக்குக் காட்டவேண்டும். மாவட்ட அமைச்சரை ஜனதிபதியே தெரிவுசெய்வார். அரசபாராளுமன்ற குழுவிலிருந்தே அவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது கட்டாயம். ஆதலால் மாவட்ட அமைச்சர் கணக்கு காட்டும் ஒருவேலையாள் போன்றே இருப்பார்.

14-ம் சரத்து சி பிரிவுப்படி அரசின் வேலைத்திட்டங்களின் செயல்பாட்டுக்கு தடையாக அமையும் இடையூறுகளை மாவட்ட அமைச்சர் கண்டுபிடித்து, அத்தடையை நீக்க வேண்டும்.

17ம் சரத்துப்படி மாவட்ட அமைச்சர் ஒருவர் தலைவராக இருந்தாலும் அபிவிருத்தி சபை செயல்படுத்த சபையும் செயலாளருமே இருப்பார். இதன்மூலம் செயலாளர் அதிக பலம்பெற்றிருப்பார்.

19-ம் சரத்துப்படி பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட ஒதுக்கீடுகள் மந்திரிசபையினலும் பாராளுமன்றத்தினலும் தலையிடமுடியும் எந்த வகையில் பார்த்தாலும் மாவட்ட மந்திரியினல் பயன் கிடையாது!

திருவாளர்கள் ஆர் என். சிவப்பிரகாசம், ரி. மகேந்திரராஜா, வி. நல்லராஜா, கே. விசாகரத்தினம், ரி. சங்கரப்பிள்ளை, எம். கே. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்கள். (சுழி. நி.)

# பொலிஸ் உதவி நாடுகிறர் இந்த யுவதி

[பண்டத்தரிப்பு]

பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் தம்மைக் காதலித்து கைப்பிடித்த கணவன் தமது 500 ரூபா பெறுமதிமிக்க இரு தங்கத் தோடுகளையும் யாழ்ப்பாணத்திலுள்ள நகைக்கடையில் விற்றுவிட்டு பணத்துடன் வருவதாதச் சொல்லி வாங்கிக்கொண்டுபோய் ஒரு மாத காலமாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை என்று இருபது வயது இளம்பெண் ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த பிரஸ்தாப இளம் பெண் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''எங்கள் வீட்டுக்குச் சமீபமாக இருக்கும் பிரஸ்தாப வாலிபரும் நானும் ஒருவரை ஒருவர் காதலித்தோம். பெற்றோர் இக்காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபடியால் நாமிருவரும் வீட்டை விட்டு வெளியேறி அச்சுவேலியிலுள்ள உறவினர் வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்துவந்தோம். அங்கு திருமணப் பதிவும் எமக்கு நடந்தது. பின்னர் எமது பெற்றோரின் விருப்பப்படி சண்டிலிப்பாயில் வந்து பெற்றோரின் வீட்டில் இருந்தோம். ஒரு நாள் தனக்குப் பணம் தேவை என்று கேட்டார். நான் எனது 500 ரூபா பெறுமதியான பவுண் தோடுகளைக் கழற்றிக் கொடுத்தேன். அதை யாழ். நகரிலுள்ள நகைக் கடையில் விற்றுவருவதாக வாங்கிக்கொண்டு போனர். போனவர் போனதுதான். மீண்டும் என்னிடம் அவர் வரவேயில்லை. அவரைத் தேடிக் கண்டு பிடித்து என்னிடம் சேர்ப்பியுங்கள்.'' பொலிசார் மேல் விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். (உ)

## பரு. பஸ்சேவை:

# பிராந்தியத் தலைவர் டிப்போவுக்கு விஜயம்

(நெல்லியடி)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியத் தலைவர் திரு. கே. அமரசிங்கம் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு விஜயம் செய்தார்.

டிப்போவிற்கு வருகை தந்த அவர் டிப்போ முகாமையாளர் திரு. இ. வர்ணகுலசிங்கம், பொறியியல் அதிகாரி திரு. எஸ். உதயகுமார் வட்டார பொறியியல் அதிகாரி திரு. பீ. சி. ஜெயசிங்கம் ஆகியோருடன் பஸ் சேவைகள் பற்றி உரையாடினர்.

பஸ் பிரயாணிகளுக்கு மிகவும் வசதியான இருக்கைகளை வழங்கத் திரு. அமரசிங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். (உ)

# "அபிவிருத்தி எங்கு ஏற்படினும் நாட்டுக்கே உதவுகிறது"

(உண்ணாட்டன்னை)

''இலங்கையின் எப்பாகத்திலாயினும் அபிவிருத்தி ஏற்படுமாயின் அது எமது நாட்டின் பொருளாதாரத்திற்கே உதவுகிறது'' என்று நெடுந்தீவு மக்களின் பொருளாதார அபிவிருத்திபற்றி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த ஆலோசனைக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜெயநாதன் தெரிவித்தார்.

உருத்திரபுரம் குருகுல நிர்வாகி திரு. வே. கதிரவேல் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. ஜெயநாதன் தொடர்ந்து பேசுகையில், ''நெடுந்தீவு போன்ற பகுதிகளில் உயர்ந்த மரங்களை நாட்டுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவற்றுக்கு அரசு உதவினலும் அப்பகுதி மக்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும் அவசியமாகும். மழை நீரைத் தேக்கி வைக்கக் கூடிய வழிவகைகளைக் கையாண்டாலும், அவை ஒரு சில மாதங்களுக்கே பயன்படமுடியும். நன்னீர் உள்ள பகுதிகளில் அந்த நீர் பழுதடையாதவாறு பாதுகாக்கப்படவேண்டும். இப்பிரதேசத்தில் உள்ள வெட்டுக்களிபகுதியில் மட்டும் மழைநீரைத் தேக்கிவைப்பதால் அது நல்ல பயனைத்தரும் என்று சொல்ல முடியாது. இருந்தபோதும் வெட்டுக்களியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏதாவது பயன்படத்தக்க வகையில் நீர்த்தேக்கத்தை உண்டுபண்ணவும் இதனேரத்தில் மரங்களை நாட்டி பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறினர்.

நில, நீர் ஆராய்ச்சிப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். சச்சிதானந்தம் நெடுந்தீவின் கடல்வளம், இயற்கைவளம், நீர்வளங்கள் பற்றி ஆதாரரீதியாக இக்கூட்டத்தில் விளக்கிப் பேசினர்.

நெடுந்தீவைச் சேர்ந்த திரு. ஐ. சச்சிதானந்தம் பேசுகையில், 15000 மக்கள் வாழ்ந்து வந்த நெடுந்தீவுப் பகுதியில் இன்று 5000 மக்கள் வாழும் நிலை இருப்பதாகவும், இதற்கு இப்பகுதியின் பொருளாதாரமே காரணமென்றும் தெரிவித்தார்.

நெடுந்தீவு பொதுச்சேவை கூட்டுறவுச்சங்கத்தின் சார்பில் நடந்த இக்கருத்தரங்கில் இச்சங்கச் செயலாளர் திரு. ஏ. மரியநாயகம்பிள்ளை, தேசிய இளைஞர்மன்ற அத்தியட்சகர், ரோட்டரிக்கழகச் செயலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவின் நிலவளம், நீர்வளம், பனைவளம், கடல் வளம்போன்ற இயற்கைவளங்களைப் பாதுகாத்துப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்து பரவலாக எல்லோராலும் பேசப்பட்டன. இத்தீவில் உள்ள முருகைக் கல்லைப் பயன்படுத்தி ஒரு தொழிலை மேற்கொள்ள இடமுண்டென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டன. (அ)

# சிறுவர் கைவரிசை

(நெல்லியடி)

கடமைக்குச் செல்லபஸ் நிலையத்தில் நின்ற தாதி ஒருவரின் கைப்பை நெல்லியடி பஸ் நிலையத்தில் நின்ற இரு சிறுவர்களினல் திருடப்பட்டது.

இச்சிறுவர்கள் கைப்பையை எடுத்துக்கொண்டு பருத்தித்துறைக்குசெல்ல தயாராக நின்ற வானில் ஏற முயற்சிக்கையில் தாதியின் கூக்குரல் கேட்ட பிரயாணிகள் இச்சிறுவர்களைப் பிடித்ததுடன் கைப்பையையும் கைப்பற்றினர்கள். சிறுவர்கள் பின்னர் விரட்டப்பட்டனர்.

கூட்டுறவு வல்லை ஆஸ்பத்திரியில் கடமைபுரியும் தலைமைத் தாதி திருமதி எஸ். இந்துராணியின் கைப்பையே திருடப்பட்டது. (உ)

# 'கலைக்கோலம்'

(பதுளை)

பதுளை இந்துமகாசபை கலைஞர் வேல்ஆனந்தன் குழுவினரின் ''கலைக்கோலம்'' நிகழ்ச்சியை எதிர்வரும் சனிக்கிழமை பதுளை லிபேட்டி படமாளிகையில் நடாத்தவுள்ளது. [உ]

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SOPHIA LOREN in
'Scandal in Sorrento' [Colour Scope]

# தமிழ்ஈழம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாத முறையில் நாங்கள் சில குடியேற்றங்களை நடாத்திவருகின்றோம். கிழக்கு மாகாண இளைஞரைப் பொறுத்தவரை, மாவட்ட அமைச்சர் விஷயத்தில் வடக்கு மாகாண இளைஞருடன் ஒத்துழைப்பார்கள்.

## கிழக்கிற்கு சரிவராது

அமரர் இராசமாணிக்கம் சிரார்த்ததினக் கூட்டத்தில் ஒருவர் கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் ஈழம் சரிவராது என்றார். கிழக்கு மாகாணம் சரிவராவிட்டாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளே ஒரு தமிழ் ஈழம் உருவாக்கினல், எனக்கு ஒரு நாடு இருக்கிறது என்ற நிம்மதி ஏற்படும்.

சகல தேர்தல்களிலும் பங்கு பற்றமாட்டோம், போட்டியிடோம், பிரசாரம் செய்யோம், சொந்த மண்ணில் வாழமுடியாத நிலையில் கிராமாட்சிமன்றம் மூலம் பாதுகாப்பு தேவையில்லை.''

## 3 பக்கமும் அடி

மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. வாசுதேவா கூறியதாவது:- 'மத்தளத்திற்கு இரு பக்கம் அடி, மட்டுநகர் இளைஞர்களுக்கு 3 பக்கமும் அடி. கூட்டணி தலைமைப்பீடம் செய்த தவறினல் மட்டுநகர் எம். பி. விரும்பியதுபோல் நடந்துவருகிறார். மட்டுநகர் இளைஞர், தமிழ் ஈழ லட்சியத்திற்காக உழைத்துவருகின்றனர்.

தமிழ் ஈழத்தை கிழக்கு மாகாணம் ஆதரிக்கவில்லை; வடக்குத்தான் ஆதரிப்பதாக அமைச்சர் தேவநாயகம் கூறிவருகிறார். ஆனல் வடக்கு மாத்திரமல்ல, கிழக்கும் ஆதரிக்கிறதென்பதை அரசியல் அமைப்பு பகிஷ்கரிப்புபோது உணர்ந்திருப்பர். வடக்கில் கூட நடக்காத நிலையில் மட்டக்களப்பில் அன்று பூரண கடையடைப்பு, பாடசாலை பகிஷ்கரிப்பு நடத்தி வெற்றி கண்டோம் இன்று இளைஞர் சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட அமைச்சர் பதவிகளினல் அபிவிருத்தி செய்யலாம், சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள் கடந்த 25 வருடங்களாக அரசுடன் ஒட்டி உறவாடி சிங்களக்குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடிந்ததா? என்ன அபிவிருத்தி செய்தார்கள், அரசுடன் சேர்ந்து செய்யமுடியாததை கூட்டணியினர் மாவட்ட அமைச்சர் பதவி பெற்றுச் செய்துவிட முடியுமா? மாவட்ட அமைச்சரினல் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க முடியாது. நிலத்தைப் பாதுகாக்கவும் முடியாது.

அபிவிருத்திக்காக வாக்குக் கேட்ட சுதந்திரக்கட்சி, அபேட்சகர் கடந்த தேர்தலில் 11,000 இரட்டை வாக்குகளைப் பெற்றார். அதே நேரம் தமிழ் ஈழத்திற்காக 56,000 வாக்குகள் மட்டுநகரில் கிடைத்தது. இதனை மாவட்டமந்திரிக்கு ஆசைப்படுகிறவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கொழும்புக் கிளையை சேர்ந்த திரு. ரகுபதிபாலசிறிதரன் கூறியதாவது கூட்டணித்தும் வெட்டி வீழ்த்தியும் அரசு ஒரே முறையில் தமிழினத்தை அழிக்கமுயலுகிறது.

குடியேற்றத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண இளைஞர்கள்தான் மாவட்ட அமைச்சர் பதவிகளை கூட்டணியினர் ஏற்கக் கூடாதென்று தீர்மானத்தை கொண்டுவந்துள்ளனர்.

தேர்தலினல் கால விரயம், சத்திவிரயம், பண விரயம் ஏற்படுகிறது. அதனல் நாம் தேர்தலை முற்றுகப் பகிஷ்கரிப்போம்.

தமிழ் இளைஞர் பேரவை தமிழ் மக்கள் கட்சியாகவிளங்கும். வேறு எந்த அரசியல் கட்சிகளிலும்இளைஞர்பேரவையினர் உறுப்பினராக இருக்கக் கூடாது

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபையில் இளைஞர் பேரவையை சேர்ந்த 10 பேர் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்தும் பிரதிநிதிகளாக இருப்பார்கள், கூட்டணி செயல்குழுவில் மாவை சேனதிராசா இருக்கிறார். அவர் தொடர்ந்தும் செயற்குழுவில் அங்கம் வகிப்பார். இளைஞர் பேரவை பிரதிநிதிகளாக இருப்பார்களேதவிர கூட்டணி உறுப்பினர்களாக அல்ல.

சுதந்திரக் கட்சி தமிழ் இளைஞர்களை பிடித்து அடித்தது. யூ. என். பி. தமிழ் இளைஞர்களை தலைகீழாக கட்டி அடித்தது. சுதந்திரக்கட்சி தமிழ் இளைஞர்களை சிறைவைத்தது' யூ. என். பி அரசு விவர்களின் படங்களை வெளியிட்டு சிறைப்பிடித்தார்கள். உணர்ச்சிவசப்பட்டு இத் தீர்மானங்களை நாங்கள் எடுக்கவில்லை உண்மையை உணர்ந்து நடந்திருக்கிறோம்.

உங்கள் எதிர்காலம் இருள் சூழ்ந்தது. வீடுகளில், ஆடு மாடு, கோழிகளை வளருங்கள். பயன்தரும் மா, தென்னை, பலா, முருங்கை, வாழை, பனைமரங்களை உங்கள் காணிகளில் நடுங்கள். பலகாலம் பழுதடையாத உணவுப்பண்டங்களை குறிப்பாக பனம் பண்டங்களை சேமித்து வையுங்கள். எல்லாவற்றையும் தமிழினத்தின் நன்மைக்காக கூறுகிறோம்.

உடுப்பிட்டியை சேர்ந்த செந்தூர்ராசா பேசுகையில் 77ஆகஸ்ட் கலவரத்தின்போது யாழ் பொலிஸ் அதிபர் செனிவரத்தினவிற்கு பதிலாக திரு. ருத்திரா ராஜசிங்கம் நியமிக்கப் பட்டாரென்றும், அதன்பின்பும் யாழ்ப்பாணத்தில் கலவரம் நடந்ததாகவும் கூறினர்.

தமிழ்ப் பகுதிகளுக்கு தமிழர்கள் மாவட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டாலும் அரசின் திட்டங்கள் தான் அமுல்செய்யப்படும் என்றும் கூறினர்,

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை சேர்ந்த திரு. ந. இராசநாயகம் பேசுகையில் இன்றைய முடிவுகளை என்றோ எடுத்திருக்கவேண்டும் எனக் கூறினர்

எங்கள் மூலம் பதவிக்கு வந்தவர்கள் இன்று இளைஞர்களைப் பார்த்து திட்டம் உண்டா? என்று கேட்கிருர்கள் என்றும் அவர் கூறினர்.

வவனியாவைச்சேர்ந்த திரு. தர்மலிங்கம், செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்கள்,

பொலிசார் பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்ததுடன் பேச்சாளர்களை புகைப்படம் பிடித்தனர். [க]

"இலங்கை எங்கும்

# தமிழும் சிங்களமும் கட்டாய பாடமாக வேண்டும்"

## யாழ். இந்து பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் முத்துலிங்கம்

(இணுவில்)

'தமிழ் சமுதாயத்தின் இனமொழிப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் மும்மொழித் திட்டம் அமுல் நடத்துவதால் எவ்வித பயனும் ஏற்படாது மொழித்திணிப்பு எங்கும் வெற்றியை அளித்ததாக சரித்திரத்தில் இல்லை. நல்நோக்கம் கருதித்தான் இத் திட்டம் கொண்டு வரப்படும் என்றல் தமிழ், சிங்களம் ஆகிய இரு பாடங்களும் நாடெங்கிலும் கட்டாய பாடங்கள் ஆக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட வகுப்பில் இரு பாடங்களும் சித்தி எய்தியவர்கட்கே தொழிலில் முன்னுரிமை அளிக்க வேண்டும். அன்றேல் மும்மொழித் திட்டம் வெறும் கண்துடைப்பே ஆகும்.'

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் கலாநிதி சு. முத்துலிங்கம் தமது உரையில் குறிப்பிட்டார்.

பொலிஸ் படை பயில் குழு, சாரணர்படை, கடேற் குழு ஆகியோரின் அணிவகுப்பு மரியாதைகளுடன் குமாரசுவாமி மண்டமத்துக்கு திரு. முத்துலிங்கம் தம்பதிகள் அழைத்து வரப்பட்டனர். கல்லூரி அதிபர் திரு பி. எஸ். குமாரசுமாமி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

கலாநிதி முத்துலிங்கம் தமதுயில் மேலும் கூறியதாவது.

### கல்வி அமைப்பில் வசதி

நாட்டின்எதிர்காலத்தையே மாற்றியமைக்கும் சக்தி அந் நாட்டின் கல்வி அமைப்பில் தங்கியுள்ளது. 1972-ல் முன்னைய அரசாங்கம் கொண்டு வந்த கல்விமுறை மிகவும் சிறந்தமுறை, இன்றைய அரசு அதில் சில திருத்தங்களை மட்டும் மேற்கொண்டமை பாராட்டத்தக்கது, எனினும் கல்வி அமைப்பை மாற்றும் பொறுப்பு அரசாங்கங்களிடம் இருப்பதால் அது நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும். எனவே கல்விமான்கள், பெற்றோர்கள், உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கல்விச் சீர்திருத்தத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும் காலத்திற்கேற்ப கல்வி அமைப்பை ஆராய்ந்து மாற்றும் பொறுப்பு அவர்களிடமே இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகக் கல்வியில் மொழிவாரித் தரப்படுத்தல் இன்னமும் நீக்கப்படவில்லை என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனல் இன்றும் அவ்வாறு நடைபெறுகிறது. இவற்றினை நீக்குவதற்கு அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு வளாகத்தை ஆரம்பிக்க வேண்டும், மட்டக்களப்பு வளாகத்தையும் உடன் திறக்கவும் தகுதியுடைய அனைவருக்குமே பல்கலைக்கழகக் கல்வி அளிக்க வேண்டும், அரசாங்கத்தினல் வளாகம் அமைக்க முடியாவிடில் தனியார் அமைத்து நடாத்த அனுமதி வழங்க வேண்டும்.

### கல்விப்பீடம்

"யாழ் வளாகத்தில் கல்விப் பீடம் ஒன்று அமைத்தால் இங்குள்ள ஆசிரியர்கள் டலர் கொழும்பு வந்து சிரமம் கொள்ளத் தேவையில்லை இதற்காக ஆசிரிய சங்கங்களோ, ஏனைய பொது ஸ்தாபனங்களோ அக்கறை எடுப்பதாகத் தோன்றவில்லை அனைவரும் சேர்ந்து யாழ் வளாகத்தில் கல்விப்பீடம் ஒன்றினை அமைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் அரசிடம் கோரிக்கை விடவேண்டும் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேராதனையில் கல்விப்பீடம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அது ஆசிரிய சங்கங்களின் முயற்சியால் வந்தது எனவே எமது சங்கங்களும் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

திருமதிதனலக்ஷ்மி முத்துலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

செல்வன் அபயசரன் ஜனகன், பழைய மாணவர் சங்கச்செயலாளர் திரு வை ஏரம்பமூர்த்தி ஆகியோரின் நன்றியுரையுடனும் கல்லூரிக்கீதத்துடனும் விழா முடிவுற்றது. ... [ச-உ]

# இன்று நூல்அறிமுகவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். இலக்கியவட்ட நூல் அறிமுகவிழா, யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது. கவிமணி வி. கந்தவனம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், திரு க. சொக்கலிங்கத்தின் 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' பற்றி திரு. எம். சண்முகலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். கா. சை. செ. சுந்தரப்பிள்ளை வரவேற்புரையும், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அறிமுக உரையும் நிகழ்த்துவர். [ஈ]

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி தெற்கு அருணசலம் வித்தியாசாலை புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சிவசம்பு

பிரபல சாராயத் தவறணை குத்தகையாளர் ஆறுமுகம் சிவசம்பு காலமாகிவிட்டார். இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் (அக்கவுண்டன் ஸாம்பியா), சண்முகநாதன் (பலாலி ஆசிரிய கலாசாலை), பரந்தாமன். கனகலிங்கம் (பேராதனை சர்வகலாசாலை) இராசலிங்கம், திருமதி இராஜேஸ்வரி சுந்தரமூர்த்தி, சந்திரதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரமூர்த்தி (என்ஜினியர்—நைஜீரியா), திருமதி பர்வதாதேவி தர்மலிங்கம், திருமதி ரஞ்சனு சண்முகநாதன் (வந்தாறுமூலை ம. ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனுரும், சாராயத் தவறணை குத்தகையாளர் ஏரம்புவினதும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, மாரிமுத்து, முத்துவேலு ஆகியோரினதும் அன்புச் சகோதரருமாவார். அன்னரின் பூதவுடல் 1/1 பிரப்பங்குளம் லேன், வண்ணர்பண்ணையிலுள்ள அன்னரது இல்லத்திலிருந்து 1-11-78 (இன்று) மாலை 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

0712


15-11-1978வரை விசேட சலுகை விலையில் கிடைக்கும்

★ பூச்சி நாசினி ★ பங்கசுக்கொல்லி

★ தண்ணீர் பசளை

**பூச்சி நாசினி :** பரத்தயன் E. 50 (PARATHION-E 50)
ஒரு லீட்டர் (அலுமினியம் அடைப்பு)
ரூபா 100/- கழிவு 35% வரை

**பங்கசுக்கொல்லி:** எலோசல் (ELOSAL) (கந்தகம் 80%)
ஒரு ருத். பைக்கற் ரூபா 10/-
கழிவு 30% வரை

**தண்ணீர் பசளை :** கொம்பிலசால் (COMPLESAL)
(ஜெர்மனியில் அடைக்கப்பட்டது-Original Cans)
ஐந்து லீட்டர் (177 அவு.) ரூபா 210/-
கழிவு 10% வரை

விபரங்களுக்கு :

அக்கிறிகோலாஸ்

ஊரிக்காடு - - வல்வெட்டித்துறை.

0696



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Telegram Eelanaadu, Telephone: 888 - Registered as Newspaper in SriLanka.